# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

*******

முறையீட்டு மனு எண். 791/2016

ஆணை எண். 0014/2017

நாள் : 06/02/2017

**திருமதி ஹல்டா ஆல்பர்ட்,**
**கோயம்புத்தூர் – 641 025.** — முறையீட்டு மனுதாரர்

**கல்வி அலுவலர்,**
**சென்னை மாநகராட்சி,**
**சென்னை – 600 003.** — எதிர் மனுதாரர்

கோயம்புத்தூர் மாவட்டம், எடப்பாளையம் கிராமம், சிம்சன் நகர், 11/9A எண்ணிட்ட முகவரியில் வசிக்கும் திருமதி ஹல்டா ஆல்பர்ட் அவர்களின் 01.08.2016 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் 05.08.2016 அன்று பெறப்பட்டு 791/2016 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு பரிசீலிக்கப்பட்டு, கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :–

**<u>ஆணை</u>**

கோயம்புத்தூர் மாவட்டம், எடப்பாளையம் கிராமம், சிம்சன் நகர், 11/9A எண்ணிட்ட முகவரியில் வசிக்கும் திருமதி ஹல்டா ஆல்பர்ட் அவர்கள் 1965 முதல் 1976 வரை சென்னை மாநகராட்சி மேல்நிலைப் பள்ளியில் பட்டதாரி ஆசிரியையாகப் பணிபுரிந்ததாகவும், தனது குடும்ப சூழ்நிலை காரணமாக தானாகவே பணி அறவு (stayed away from duty) செய்து கொண்டதால், தான் பணியாற்றிய காலத்தினைக் கணக்கில்கொண்டு ஒய்வூதியம் வழங்ககோரி இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார். மனுதாரரின் முறையீடு குறித்து சென்னை மாநகராட்சிக் கல்வித்துறையின் கல்வி அலுவலரின் 28.10.2016 நாளிட்ட அறிக்கை பெறப்பட்டது. மாதவரம் நெடுஞ்சாலை, சென்னை மாநகராட்சி பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் திருமதி ஹல்டா ஆல்பர்ட் அவர்கள் பட்டதாரி ஆசிரியராகப் பணிபுரிந்து வந்தபொழுது எந்தவிதத் தகவலும் தெரிவிக்காமல் தன்னிச்சையாக பணிக்கு வராமல் இருந்துவிட்டார் என்றும், ஒய்வூதியம் வழங்கக் கோரும் மனுதாரரின் கோரிக்கை குறித்து முதன்மைக் கணக்காயரிடம் கருத்துரு பெறப்பட்டது என்றும், வயது முதிர்வு ஒய்வு, தன்விருப்ப ஒய்வு மற்றும் மருத்துவக் காரணங்களுக்கான ஒய்வு ஆகிய காரணங்களின் அடிப்படையில் ஒய்வு பெற்றால் மட்டுமே ஒய்வூதியம் வழங்க இயலும் என்று முதன்மைக் கணக்காயர் தெரிவித்துள்ள நிலையில், மனுதாரரின் கோரிக்கையினை ஏற்க இயலவில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

2. முறையீட்டு மனுதாரரின் கோரிக்கை, ஒய்வூதியம் வழங்கப்படுவதற்கான வரையறைகளுக்குட்படவில்லை. தானாகவே பணி அறவு செய்து கொண்டவர்களுக்கு ஒய்வூதியப் பலன் வழங்கலாமா என்பது அரசின் கொள்கை முடிவு சம்பந்தப்பட்டதாகும். மனுதாரரின் முறையீடு, குற்றச்சாட்டு அல்லது நிர்வாகச் சீர்கேடு என்ற பொருள்வரையறையிலும் அமையவில்லை. தனக்கு ஒய்வூதியம் வழங்கக் கோரும் முறையீட்டினை சென்னை மாநகராட்சி கல்வித்துறை மறுத்துள்ள நிலையில் மனுதாரர் அரசிடம் முறையீடு செய்து உரிய நிவாரணம் பெறலாம் என இம்முறைமன்றம் நடுவம் கருதுகிறது. மேலும் 2014–ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம், 10(4)(c) எண்ணிட்ட பிரிவின்படி முறையீட்டு மனுதாரருக்கு பிற தீர்வுகள் கிடைக்கத்தக்கதாக இருக்கும்போது மற்றும் வழக்கின் சூழ்நிலைகளின் நோக்கில் அத்தகைய தீர்வுகளைப் பெறுவது முறையீடு செய்துள்ளவருக்கு அதிகப்படியான நலனைத் தரக்கூடியதாக இருக்கும் என இம்முறைமன்ற நடுவம் கருதி ஒய்வூதியம் வழங்கக் கோரும் முறையீடு குறித்து அரசுக்கு முறையீடு செய்யுமாறு முறையீட்டு மனுதாரருக்கு அறிவுறுத்தி இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2017 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 4–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செ.பலாளர்.

பெறுநர்

**திருமதி ஹல்டா ஆர்பர்ட்,**
**எண்.11 /9ஏ, சிம்சன் நகர்,**
**எடப்பாளையம்,**
**கோயம்புத்தூர் – 641 025.**

**கல்வி அலுவலர்,**
**கல்வித் துறை**
**சென்னை மாநகராட்சி,**
**ரிப்பன் மாளிகை.**
**சென்னை – 600 003.**